# வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே ஜூலையில் மெட்ரோ ரயில் இயக்கப்படும்

## அமைச்சர் எம்.சி.சம்பத்



சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் வெள்ளிக்கிழமை ஃபிளை மின்சார இருசக்கர வாகன சேவையை தொடக்கி வைத்தார் தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத். உடன், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன இயக்குநர் எல்.நரசிம் பிரசாத், நிர்வாக இயக்குநர் பங்கஜ் குமார் பன்சால், ஃபிளை நிறுவனத்தின் நிறுவனர் அனிருத் கெம்ரா.

சென்னை, பிப். 28: சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்கத்தில்,வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே திட்டப்பணி 2 அல்லது 3 மாதங்களில் முடிந்து, ஜூலையில் மக்கள் பயன்பாட்டுக்குதிறக்கப்படும்என்று தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.

மெட்ரோ ரயிலில் பயணிகளுக்கு செல்லிடப்பேசியில் கட்டணமில்லா பொழுதுபோக்கு அம்சங்கள், மெட்ரோ ரயில் நிலையங்களில் மின்சார ஸ்கூட்டர் சேவை ஆகியவை தொடக்க விழா சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ் குமார் பன்சல் தலைமை வகித்தார். இதில், தமிழகத் தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் கலந்து கொண்டு சேவைகளைத் தொடக்கி வைத்துப் பேசியது:

வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வரை 9.051 கி.மீ. தொலைவுக்கான திட்டப்பணி ரூ.3,770 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. இந்தப்பணிகள் 2 அல்லது 3 மாதத்தில் முடிவடைந்து, ஜூலை மாதத்தில்மக்கள்பயன்பாட்டுக்குகொண்டுவரப்படும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர்(திட்டங்கள்) ராஜீவ் நாராயண் திவேதி, நிறுவன இயக்குநர் (இயக்கம், அமைப்புகள்) பொறுப்பு எல்.நரசிம் பிரசாத் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

பொழுது போக்கு அம்சங்கள்: மெட்ரோ ரயில்களில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் திரைப் படங்கள், காட்சிகள் போன்ற பொழுதுபோக்கு வசதிகளை கட்டணமின்றி பார்க்கும் வசதி முதல் கட்டமாக சென்ட்ரல் மெட்ரோ ரயில்நிலையத்தில் இருந்து பரங்கிமலை மற்றும் விமான நிலையம் செல்லும் பச்சை வழித்தடத்தில் தொடங்கப்பட்டுள்ளது. பயணிகள் செல்லிடப்பேசியில் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்த வசதிப் பெறலாம்.

மின்சார ஸ்கூட்டர் வாகனச் சேவை: பயணிகளுக்கு கூடுதல் வசதிக்காக, மிக குறைந்த வாடகையில் மின்சார ஸ்கூட்டர் திட்டம் ஃபிளை என்ற நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.

இந்த வசதியை பயன்படுத்த பயணிகள் தங்களுடைய செல்லிடப்பேசியில் 'ஃபிளை' என்ற செயலியை பதிவிறக்கம் செய்ய வேண்டும். இந்த வாகனத்தை இயக்க சாவி எதுவும் தேவையில்லை. செயலி மூலமே இயக்கலாம்.

ரூ.5-க்கு இந்த ஸ்கூட்டரை பதிவு செய்து, பயணிக்கும் ஒவ்வொரு நிமிஷத்துக்கும் ஒரு ரூபாய் மட்டுமே வாடகை கட்டணம் செலுத்த வேண்டும். எந்த நிலையத்திலிருந்தும் ஸ்கூட்டர் எடுத்துச் சென்று செயலியில் குறிப்பிட்டப்பட்டுள்ள எந்த இடத்திலும் வாகனத்தை விட்டுச் செல்லலாம். முதல் கட்டமாக, கிண்டி, ஆலந்தூர், நந்தனம், பரங்கிமலை ஆகிய மெட்ரோ ரயில்நிலையங்களில் செயல்படுத்தப்படும்.